TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8051815

1. District மாவட்டம் : கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2020 FIR No.: மு.த.அ. எண் 14/2020 Date: நாள் 11.12.2020

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Criminal Procedure Code Sections பிரிவுகள்: 102
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 10.12.2020 17.00 hrs Date to : நாள் வரை 10.12.2020 21.30 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11.12.2020 Time : நேரம் 1030 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - IV Time : நேரம் 1030 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 65 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 1–ம் எண் இணை சார் பதிவாளர் அலுவலகம், விருத்தாசலம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. அமுதா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் –
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் ––– Place of Issue : வழங்கப்பட்ட இடம் –––
(f) Occupation : தொழில் உதவி ஆய்வுக்குழு அலுவலர், (g) Address : முகவரி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**K.கணேசன், வயது 52, த/பெ.குமாரசாமி, 1–ம் எண் இணை சார்பதிவாளர், விருத்தாசலம், கடலூர் மாவட்டம்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

**தாமதமில்லை.**

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)
பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று **11.12.2020** ந்தேதி காலை **10.30** மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, அ.அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டம், கடலூர் மாவட்ட ஆட்சியரகம், கடலூர் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு; நாள் : **11.12.2020** அனுப்புநர் அ. அமுதா, உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம், கடலூர். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – சார் பதிவாளர் அலுவலகம், விருத்தாசலம், கடலூர் மாவட்டம் – திடீர் ஆய்வு சோதனை – உரிய சரியான முகாந்திரம் இன்றி கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் – திடீர் ஆய்வு மகஜரில் கைப்பற்றுதல் – ஒப்படைப்பு – நடவடிக்கை – எடுக்க வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல்

(தொடர்ச்சி பக்கம் -3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

11/12/20 11/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11.12.2020 at 12.30 hrs.

Name: பெயர் E.S.J. MELVYN RAJSINGH
Rank: நிலை DSP...........No. எண் ..........
VACS, Cuddalore

– சம்மந்தமாக. கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், கடலூர் (இருப்பு) உதவி ஆய்வுக்குழு அலுவலரான அ.அமுதா ஆகிய நான் இன்று 10.12.2020ந்தேதி மதியம் சுமார் 02.00 மணிக்கு எனது அலுவலகத்தில் இருக்கும்போது எனக்கு கிடைத்த தகவலின்படி கடலூர் மாவட்டம், விருத்தாசலம் இணை எண்.1 சார்பதிவாளர் அலுவலகத்தில் உள்ள ஆவண எழுத்தர்கள் இன்று 10.12.2020 விருத்தாசலம் சார்பதிவகத்தில் சார்பதிவாளர் திரு. K.கணேசன் என்பவரை சந்தித்து ஆவணங்கள் பதிவு செய்வதற்காகவும் மற்றும் இதர பதிவுகளுக்காகவும் லஞ்சமாக பணம் கொடுக்க போவதாக கிடைக்க பெற்ற ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு மதியம் சுமார் 02.30 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த துணை காவல் கண்காணிப்பாளர் திரு.E.S.J.மெல்வின் ராஜசிங் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி விருத்தாசலம் சார்பதிவகம் அலுவலகத்திற்கு மாலை சுமார் 4.30 மணிக்குமேல் சென்றால் அங்கு ஆவண எழுத்தர்கள் விருத்தாசலம் இணை எண்.1 சார்பதிவகத்தில் சார் பதிவாளரிடம், பத்திர பதிவிற்கு கொடுக்க உள்ள பணத்தை திடீர் ஆய்வு செய்து லஞ்சப்பணத்தை கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவரது காவல் குழுவினர்களும் மாலை 3.00 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு விருத்தாசலம் கடலூர் – விருத்தாசலம் தேசிய நெடுஞ்சாலையில் வடக்கு பக்கம் உள்ள சாலையில் தெற்கு பார்த்து அமைந்துள்ள விருத்தாசலம் இணை எண்.1 சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் விருத்தாசலம் இணை எண்.1 சார்பதிவாளர் அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 5.00 மணிக்கு மேற்கு பார்த்து அமைந்து இருக்கும் விருத்தாசலம் இணை எண்.1 சார்பதிவாளர் அலுவலகத்திற்கு உள்ளே சென்றோம். அப்போது அங்கிருந்த பொதுமக்கள் பதற்றத்துடன் இணை எண்.1 சார்பதிவாளர் அலுவலகத்தைவிட்டு வெளியேற முயன்றவர்களை தடுத்து நிருத்தி விசாரித்தபோது, அவர்கள் பத்திரம் பதிவு செய்வதற்காக சார் பதிவாளர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார்கள். பின்னர், துணை காவல் கண்காணிப்பாளர் இணை எண்.1 விருத்தாசலம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பயந்து ஓடி வெளியே வந்தவர்களை, அலுவலகத்தின் மெயின் ஹாலில் உட்கார வைத்துவிட்டு, பாதுகாப்பிற்கு காவலர்களை நியமித்தார். நானும், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் இதர காவல் குழுவினரும் மெயின் ஹாலில் கிழக்கு பக்கத்தில், மேற்கு பார்த்து அமர்ந்திருந்த நபரிடம், அவர்தான் சார்பதிவாளர் என தெரிந்துகொண்டபின்னர், என்னையும், துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் ஆய்வு குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர்

அவரை பற்றி விசாரித்த போது தனது பெயர் K.கணேசன், வயது 52, த/பெ K.குமாரசாமி, இணை எண்.1 சார்பதிவாளர், விருத்தாசலம் என்றும், வீட்டு முகவரி நெ.2, மெயின் தெரு, திருநகர், (Backside to BSNL Office) பண்ருட்டி நகரம், கடலூர் மாவட்டம் என்றும் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, சார்பதிவாளர் திரு.கணேசன் அவர்கள் முன்னிலையிலேயே ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். மேற்படி விருத்தாசலம் சார்பதிவாளர் அலுவலகமானது கடலூர் – விருத்தாசலம் தேசிய நெடுஞ்சாலையில் விருத்தாசலம் தாலுக்கா அலுவலகத்திற்கு கிழக்கில் அமைந்துள்ள தனி அரசு கட்டிடமாகும். கட்டிடமானது பழைய மெட்ராஸ் டரஸ்ட் என்று தளம் கொண்ட பழைய கட்டிடடத்தில் இயங்கி வருகிறது. இதன் பிரதான வாயிற்படி தெற்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வலுவலகத்தின் முகப்பில் வராண்டா சுமார் 10 x 10 அடி நீள அகலமுள்ளது. அதனை தொடர்ந்து பிரதான வாயிற்படியும் அமைந்துள்ளது. அலுவலகத்தின் உள்ளே கிழக்குபுறத்தில் 1–ம் எண் இணை சார்பதிவாளர் என்ற போர்டு வைக்கப்பட்டுள்ளது. அதனடியில் மரமேடை அமைந்து அதில் அமர்ந்திருந்த திரு.கணேசன் அவருக்குறிய இருக்கை மற்றும் அதனை சுற்றியுள்ள மரடேபிள் மற்றும் சுமார் 3 x 5 அடி அளவுள்ள ஒரு இரும்பு பீரோ இருந்தது. அவரிடம் சோதனைக்கான விவரத்தை சொல்லி சோதனை செய்யப்பட்டது. அதன்படி அவரது மேஜையில் சில ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அவற்றை ஒவ்வொன்றாக சோதனை செய்ததில், கடைசியாக அடுக்கிவைக்கப்பட்டிருந்து ஆவணத்தின் அடியில் பணம் வைக்கப்பட்டிருந்தது. அதனை எண்ணிப்பாக்க 2000 x 6 = 12,000, 500 x 40 = 20,000, 200 x 10 = 2000, 100 x 18 = 1800 ஆக மொத்தம் ரூ.35,800/- இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் கணேசனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேலும், அவருக்கு அருகில் வலதுபுறத்தில் இருந்த இரும்பு பீரோவை சோதனை செய்ய அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அந்த ஆவணங்களை ஒவ்வொன்றாக சோதனை செய்ய அடுக்கிவைக்கப்பட்டிருந்து ஆவணத்தின் அடியில் பணம் வைக்கப்பட்டிருந்தது. அதனை எண்ணிப்பாக்க 2000 x 3 = 6,000, 500 x 70 = 35,000, 200 x 12 = 2400, 100 x 2 = 200 ஆக மொத்தம் ரூ.43,600/- இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் கணேசனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். 1–ம் எண் இணை சார்பதிவாளர் இருக்கைக்கு வடக்கில் சுமார் 8 x 10 அடி அளவுள்ள கண்ணாடியால் ஆன நுழைவாயிலுடன் கூடிய கணினி அறை இருந்தது. அந்த அறையில் அமர்ந்திருந்த பெண் நபரை பற்றி விசாரிக்க தனது பெயர் G.ஜெகஜோதி (40), க/பெ. கோபாலகிருஷ்ணன், நெ.3ஏ, 2வது கிருஷ்ணா தெரு, விருத்தாசலம் என்றும் தான்

இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் என்றும் தெரிவித்தார். மேலும் அவர் ஊனமுற்றவராக உள்ளார். அவரது பணி சம்மந்தமாக விவரம் கேட்க பத்திர பதிவிற்கு வரும் நபர்களை புகைப்படம் எடுப்பது என்றும் தெரிவித்தார். அந்த அறையில் மற்றொரு நபரை விசாரிக்க அவர் பெயர் S.செல்வம், வயது 23, த/பெ.சௌந்திராஜன், நெ.42, தெற் செங்குந்தர் தெரு, திருமுட்டம் என்று தெரிவித்தார். அவரது பணி பற்றி விசாரிக்க தான் IP camera operator என தெரிவித்தார். தான் Zigma Technology மூலம் outsourcing ஆக பணிபுரிவதாக தெரிவித்தார். அந்த அறையில், அறையில் மூன்று கணினிகள், ஜெராக்ஸ் மெஷின், பிரிண்டர் வைக்கப்பட்டிருந்தது. அந்த அறையை சோதனை செய்து பார்க்கப்பட்டது. பின்னர் 1–ம் எண் இணை சார்பதிவாளர் இருக்கைக்கு மேற்கில் மூன்று லேப்டேப் மற்றும் மூன்று ஸ்கேனர்கள் மற்றும் ஒரு இருப்பு பீரோ வைக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தில் இருந்த நபர்களை விசாரிக்க 1) V.அனிதா, வயது 21, த/பெ, பிரகாஷ், நெ.46, அம்மன் கோயில் தெரு, கோ.பவழங்குடி, திருமுட்டம் தாலுகா. 2) R.அம்சவள்ளி வயது 25, க/பெ. ராகதேவன், நெ.2/118, நடுத்தெரு, பள்ளிப்பட்டு, மங்கலம்பேட்டை அஞ்சல், 3) K.மகேஸ்வரி, வயது 25, க/பெ.கார்த்தி, காளியம்மன் கோயில் தெரு, அகரம், ஆண்டிமடம் தாலுக்கா, அரியலூர் மாவட்டம் என்றும் அவர்கள் அனைவரும் old document scan பண்ணும் பணியை செய்வதாக சொன்னார்கள். மேலும், V.அனிதா மற்றும் R.அம்சவள்ளி ஆகியோர் 9 star company மூலம் outsourcing ஆக பணிபுரிவதாகவும், மற்றும் K.மகேஸ்வரி தனி நபர் பணியாளராக இவ்வலுவலகத்தில் பணிபுரிவதாகவும் தெரிவித்தார். ஸ்கேனர் அறைக்கு வடக்கில் சுமார் 10 x 8 அடி அளவுள்ள நுழைவாயிலுடன் கூடிய கண்ணாடியாளன சர்வர் ரூம் இருந்தது. அதில் மூன்று கணினிகள் மற்றும் சர்வர் மற்றும் ஒரு குளிர்சாதன பெட்டி வைக்கப்பட்டிருந்தது. மேலும் மூன்று கணினிகள் வைக்கப்பட்டிருந்தது. அந்த அறையில் இருந்த நபரை பற்றி விசாரிக்க D.அசோக்ராஜ், வயது 34, த/பெ.தேவராஜ், நெ.3/275, நியூ காலனி, T.ஒரத்தூர், உளுந்தூர்பேட்டை தாலுக்கா, கள்ளக்குறிச்சி மாவட்டம் என்றும், தான் Data entry operator ஆக பணிபுரிவதாகவும், தான் TCS company மூலம் outsourcing ஆக பணிபுரிவதாக தெரிவித்தார். அந்த அறையை சோதனை செய்யப்பட்டது. அடுத்ததாக இவ்வலுவலகத்தில் வடக்கே உள்ள சுமார் 30 x15 அடி அளவுள்ள பதிவறை அமைந்துள்ளது. அதில் சுமார் 5 x 3 அளவுள்ள 2 மர பீரோக்கள் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அவ்வாவணங்கள் ஒவ்வொன்றாக சோதனையிடப்பட்டது. சோதனையில் பணம் காணப்பட்டது. அதை எண்ணிப்பார்க்க 2000 x 2 = 4,000, 500 x 60 = 30,000, 200 x 14 = 2800, 100 x 1 = 100 ஆக மொத்தம் ரூ.36,900/- இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் கணேசனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். அதே அறையில் சுமார் 8 x 10 அடி அளவுள்ள இருபுறமும் சல்லடை திறப்பு கொண்ட 4 இரும்பு அலமாறிகள் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஆவணங்கள்

அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அவ்வாவணங்கள் ஒவ்வொன்றாக சோதனையிடப்பட்டது. அதில் ஒரு அலமாரியில் பணம் காணப்பட்டது. அதை எண்ணிப்பார்க்க 500 x 76 = 38,000/- இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் கணேசனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். அதே அறையில மற்றொரு அலமாரியிலும் பணம் காணப்பட்டது. அதை எண்ணிப்பார்க்க 500 x 64 = 32,000, 200 x 5 = 1000, 100 x 9 = 900, 50 x 1 = 50, 20 x 2 = 40, 10 x 1 = 10 ஆக மொத்தம் ரூ.34,000/- இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் கணேசனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். அடுத்ததாக பதிவறைக்கு வடக்கே உள்ள சுமார் 30 x 15 அடி அளவுள்ள மற்றொரு பதிவரை அமைந்துள்ளது. அதில் சுமார் 5 x 3 அளவுள்ள 3 மர பீரோக்கள் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அவ்வாவணங்கள் ஒவ்வொன்றாக சோதனையிடப்பட்டது. அதில் ஒரு மர பீரோவில், சோதனையில் பணம் காணப்பட்டது. அதை எண்ணிப்பார்க்க 2000 x 1 = 2,000, 500 x 66= 33,000, 200 x 17 = 3400, 100 x 1 = 100 ஆக மொத்தம் ரூ.38,500/- இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் கணேசனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். சுமார் 3 x 7 அடி அளவுள்ள 10 இரும்பு பீரோக்கள் மற்றும், 3 x 7 அடி அளவுள்ள மர பீரோக்கள் வைக்கப்பட்டிருந்தது. அதில் ஆவணங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தது. அவ்வாவணங்கள் ஒவ்வொன்றாக சோதனையிடப்பட்டது. சோதனையில் ஒரு இரும்பு பீரோவில் பணம் காணப்பட்டது. அதை எண்ணிப்பார்க்க 2000 x 1 = 2,000, 500 x 70 = 35,000, 200 x 15 = 3000, 100 x 1 = 100, 50 x 1 = 50, 10 x 1 = 10 ஆக மொத்தம் ரூ.40,160/- இருந்தது. மேற்சொன்ன பணம் சம்மந்தமாக என்னுடன் இருந்த சார்பதிவாளர் கணேசனிடம் விவரம் கேட்க, இந்த பணம் இந்த இடத்தில் எப்படி வந்தது என தெரியாது என தெரிவித்தார். மேலும் இச்சோதனையில், அலுவலகத்தில் இருந்த பத்திர பதிவு எழுத்தர்கள் 1)A.சுப்பரமணி என்பவரிடம் விசாரிக்க, தனது பத்திர எழுத்தர் உரிய எண்.B/3329/CDM/84 என்றும், தான் இன்று மொத்தம் 4 ஆவணங்கள் பத்திர பதிவிற்காக கொடுத்ததாகவும், மேற்சொன்ன 4 பத்திரப்பதிவுக்கும் மற்றும் ஏற்கனவே பதிவு செய்த பத்திரப் பதிவிற்கும் சேர்த்து 1–ம் எண் இணை சார்பதிவாளர் திரு.கணேசன் என்னிடம் ரூ.22,000/- கேட்க, நான் இன்று அவரிடம் கொடுத்தேன். மேலும், மேற்சொன்ன பணம், லஞ்சப்பணம் என தெரிந்துதான் என்னிடம் கேட்டார். நானும் அவரிடம் லஞ்சப்பணம் என தெரிந்துதான் கொடுத்தேன். தொடர்ச்சியாக இவ்வலுவலகத்தில் இருந்த நபர் A.P.சீனிவாசன் என்பவரிடம் விசாரிக்க, தனது பத்திர எழுத்தர் உரிய எண்.B/55/CDM/95 என்றும், தான் இன்று மொத்தம் 7 ஆவணங்கள் பத்திர பதிவிற்காக கொடுத்ததாகவும், மேற்சொன்ன 7 பத்திரப்பதிவுக்கும் மற்றும் ஏற்கனவே பதிவு செய்த பத்திரப் பதிவிற்கும் சேர்த்து 1–ம் எண் இணை

சார்பதிவாளர் திரு.கணேசன் என்னிடம் ரூ.36,000/- கேட்க, நான் இன்று அவரிடம் கொடுத்தேன். மேலும், மேற்சொன்ன பணம், லஞ்சப்பணம் என தெரிந்துதான் என்னிடம் கேட்டார். நானும் அவரிடம் லஞ்சப்பணம் என தெரிந்துதான் கொடுத்தேன். தொடர்ச்சியாக இவ்வலுவலகத்தில் இருந்த நபர் K.பழனிவேல் என்பவரிடம் விசாரிக்க, தனது பத்திர எழுத்தர் உரிய எண்.A/121/CDM/93 என்றும், தான் இன்று மொத்தம் ஒரு ஆவணம் பத்திர பதிவிற்காக கொடுத்ததாகவும், மேற்சொன்ன ஒரு பத்திரப்பதிவுக்கும் மற்றும் ஏற்கனவே பதிவு செய்த பத்திரப் பதிவிற்கும் சேர்த்து 1–ம் எண் இணை சார்பதிவாளர் திரு.கணேசன் என்னிடம் ரூ.19,000 கேட்க, நான் இன்று அவரிடம் கொடுத்தேன். மேலும், மேற்சொன்ன பணம், லஞ்சப்பணம் என தெரிந்துதான் என்னிடம் கேட்டார். நானும் அவரிடம் லஞ்சப்பணம் என தெரிந்துதான் கொடுத்தேன். மேலும், இவ்வலுவலகத்தில் இருந்த நபர் M.பக்ருதின் அலி அகமது என்றவரிடம் விசாரிக்க தனது பெயரியப்ப A.அமானுல்லாகான் என்பவர் பதிவு பெற்ற பத்திர எழுத்தராக விருதாசலத்தில் பணிபுரிந்து, கடந்த 15 நாட்களுக்கு முன்னர் உடல்நிலை சரியில்லாமல் இருந்து இறந்துவிட்டதாகவும், அவரது அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்த K.ஷமீம்பாணு என்பவர் தற்போதும் தட்டச்சராக அவரது அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். மேலும் அவர் பத்திரப்பதிவு எழுத்தராகவும் உள்ளார். அவரது உரிமம் எண்.B/1/2011/VDM ஆகும். மேலும், தனது பெரியப்பா அலுவலகத்தை தான்தான் நிர்வகித்து வருவதாகவும் தெரிவித்தார். இன்று, K.ஷமீம்பாணு தயாரித்த ஏழு பத்திரங்களை பதியவேண்டி இவ்வலுவலகத்தில் கொடுத்தாகவும், அது சம்மந்தமாக இவ்வலுவலகத்திற்கு வந்ததாகவும் தெரிவித்தார். மேலும், மேற்சொன்ன 7 பத்திரப்பதிவுக்கும் மற்றும் ஏற்கனவே பதிவு செய்த பத்திரப் பதிவிற்கும் சேர்த்து 1–ம் எண் இணை சார்பதிவாளர் திரு.கணேசன் என்னிடம் ரூ.35,000 கேட்க, நான் இன்று அவரிடம் கொடுத்தேன். மேலும், மேற்சொன்ன பணம், லஞ்சப்பணம் என தெரிந்துதான் என்னிடம் கேட்டார். நானும் அவரிடம் லஞ்சப்பணம் என தெரிந்துதான் கொடுத்தேன். மேற்சொன்ன ஆய்வின்போது அரசு கணக்கில் வராத, சார்பதிவாளரால் உரிய காரணம் தெரிவிக்காத பணம் ரூ.2,66,960/- மட்டும் கைப்பற்றப்பட்டது. மேலும், விசாரணையில் 1–ம் எண் இணை சார் பதிவாளர் திரு.K.கணேசன் தன்னால் பெறப்படும் பணம் தனக்கு மட்டுமின்றி உடன் பணிபுரியும் அலுவலர்களுக்கும் பங்கு வழங்குவேன் எனவும் தெரிவித்தார். மேலும், அலுவலகத்தில் பராபரிக்கப்படும் கீழ்கண்ட ஆவணங்களை 1–ம் எண் இணை சார்பதிவாளர் திரு.K.கணேசன் அவர்களிடம் கோரப்பட்டது. அதன்படி 1) வருகை பதிவேடு (பக்கம் 1 முதல் 40 வரை, உபயோக படுப்பட்டவை 1 முதல் 31 வரை), 2) தனி நபர் பண இருப்பு பதிவேடு (02.01.2020ம் தேதி முதல் 09.12.2020 வரை பதிவுகள் உள்ளது) மேலும், இன்றைய தேதி 10.12.2020 பதிவுகள் எதுவும், எவரும் பதிவு செய்யவில்லை, 3) கட்டிட களப்பணி பதிவேடு (01.01.2018 முதல் 05.12.2020 வரை பதிவுகள் உள்ளது) இதன்படி கட்டிட களப்பணி சம்மந்தமாக இன்றைய தேதியில் கோப்புகள் எதுவும் நிலுவையில் இல்லையெ தெரியவருகிறது. 4) இன்று 10.12.2020 பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் விவரம் உள்ள Print out

எடுத்துக்கொடுக்க 32 சொத்து ஆவண பதிவுகள் மற்றும் ஒரு திருமண பதிவு இருந்தது. மேற்சொன்ன ஆவணங்கள் மேல்விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 05.00 மணி முதல் இரவு 09.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேலும் சோதனையின் போது என்னாலோ, என்னுடன் வந்த கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துணை காவல் கண்காணிப்பாளர் மற்றும் அவர்களது குழுவினராலோ மேற்படி அலுவலகத்தில் எனது தலைமையில் சோதனை செய்த போது எந்தவித ஆவணங்களையோ, பொருட்களையோ சேதப்படுத்தவில்லை. மேலும் எங்களது மேற்படி ஆய்வின் போது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளவில்லை. உத்திரவுப்படி இன்று 11.12.2020ந் தேதி காலை 10.30 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து, கடந்த 10.12.2020ந்தேதி விருத்தாசலம் 1–ம் எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமாக சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டி, திடீர் ஆய்வின்போது தயார் செய்யப்பட்ட அசல் திடீர் ஆய்வு மகஜர், ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,66,960/–, திடீர் ஆய்வு மகஜரில் குறிப்பிட்டுள்ள கைப்பற்றப்பட்ட ஆவணங்களை இத்துடன் இணைத்து உரிய நடவடிக்கைக்காக ஒப்படைக்கப்படுகிறது. மேலும் இது சம்மந்தமாக பதிவு செய்யும் வழக்கின் விவரம் பின்னர் தெரியப்படுத்துமாறு இதன் மூலம் கேட்டுக்கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள (ஒப்பம்.......) (அ. அமுதா), உதவி ஆய்வுக்குழு அலுவலர், கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கடலூர் மாவட்டம். அய்யா, நான் இன்று 11.12.2020ந் தேதி காலை 10.30 மணிக்கு மேலே கண்ட புகார் மனுவை பெற்று, கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.14/2020, சட்டபிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தியமைக்கப்பட்ட) சட்டம் 2018 மற்றும் 102 குற்றவியல் நடைமுறை சட்டம் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை, வாதியின் புகார் மனுவுடன் இணைத்து, கனம் தலைமை நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, கடலூர் அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

11/12/2020

Deputy Supdt. of Police
Vigilance and Anti-Corruption
Cuddalore.